தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1984 பிப்ரவரி 18, சனிக்கிழமை

மாசி 6, ருத்ரோத்காரி—திருவள்ளுவர் ஆண்டு 2015.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

''கண்ணிற்கு அணிகலம் கண்ணோட்டம் அஃதின்றேல்
புண்ணென்று உணரப் படும்.''

ஒருவனுடைய கண்ணிற்கு அழகு தரும் அணிகலன் கருணை நிறைந்த நோக்கமாகும். இந்த அணிகலனைப் பெறாத கண்கள் புண் என்றே கொள்ளப்படும்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

திருச்சி சட்டக் கல்லூரியில் மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப பணியாளர்களை நியமனம் செய்யும் திட்டம்.

61 (*வினா எண் 6645)—திரு. எஸ். இராசாராமன். மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி சட்டக் கல்லூரியில் மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப ஆசிரியர் அல்லாத பணியாளர்கள் (Non-Teaching Staff) நியமனம் செய்யப்படாமல் இருப்பது அரசு கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் இதுகுறித்து அரசு நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம். (அ) ஆம்.

(ஆ) திருச்சிராப்பள்ளி சட்டக் கல்லூரிக்கு அரசு 1983–84 ஆம் ஆண்டின் பகுதி 2 திட்டத்தின் கீழ் மேலாளர் பதவியையும் உதவியாளர் பதவியையும் வழங்கியுள்ளது.

திரு. ரா. உமாநாத். மாண்புமிகு தலைவரவர்களே, இந்தச் சட்டக் கல்லூரி ஐந்தாண்டு கோர்ஸ் புதிதாக உப ஜனாதிபதி ஹிதயதுல்லா அவர்கள் திறந்து வைத்திருக்கக் கூடிய கோர்ஸ். அது நமக்குத் தெரியும். அதனுடைய இன்ஃப்ராஸ்ட்ரக்சர் ஃபெசிலிட்டீஸ், மினிமம் அமெனிட்டீஸ் இல்லாத நிலையில், இரண்டு பதவிகளை வழங்கியுள்ளதாக சொல்கிறார்கள். ஆனால் இன்னும் நான்-டீச்சிங் ஸ்டாப் பலர் இல்லாத நிலை; டீச்சிங் ஸ்டாப் இல்லாத நிலை; கட்டிடம் சரியாக இல்லை; மாணவர்களுக்குப் படிப்பதற்குப் போதுமான என்வைரன்மென்ட் சரியாக இல்லாமல் பாதகமான நிலை இருக்கிறது; ஹாஸ்டல்

128—270—1

இல்லை. இருக்கிற பஸ்ஸும் ரிப்பேராகி தகர டப்பா போல் இருக்கிறது. இந்த நிலையில் புதிதாகத் திறக்கப்பட்டிருக்கக் கூடிய கோர்சில் மாணவர்கள் எப்படிப் படிக்க முடியும்? இன்ஃப்ராஸ்ட்ரக்சர் ஃபெசிலிட்டீஸ் கொடுப்பதற்கு உங்களிடம் என்ன ப்ரப்போசல்ஸ் இருக்கிறது, தகர டப்பா பஸ் உள்பட?

மண்புமிகு பேரவைத் தலைவர். பஸ் பழுது அடைந்திருக்கிறது என்று சொல்லலாம். தகரம் விலை ஜாஸ்தி.

திரு. ரா. உமாநாத். உண்மையிலே அது இருக்கும் நிலையைப் பார்த்தால் இன்னும் மோசமான வார்த்தைகளைக்கூடச் சொல்லலாம்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம். மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இங்கே கேட்கப்பட்டிருக்கின்ற கேள்வி' நான்-டீச்சிங் ஸ்டாஃப் பற்றியது. அதிலே சட்டக் கல்வி இயக்குநர் அவர்கள், மேலாளர், உதவியாளர், உதவி நூலகர், பதிவேடு எழுத்தர், கடைநிலை ஊழியர் போன்ற ஆறு பதவிகளைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அதில் மேலாளர் பதவியையும், உதவியாளர் பதவியையும் வழங்கியுள்ளது. சிக்கன நடவடிக்கைகளின் காரணமாக இவைகளைச் செய்திருக்கிறோம். மேற்கொண்டு அரசு தக்க நடவடிக்கை எடுக்கும்.

திரு. எல். இளையபெருமாள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் சொல்கின்றபொழுது ஆறு நபர்கள் கேட்கப்பட்டிருப்பது பற்றிச் சொன்னார்கள். ஆனால் இதுபோன்று புதிதாகத் தொடங்குகின்ற இன்ஸ்ட்டியூஷன்களில் அரசாங்கத்தின் உத்தரவு 18 சதவீதம்என்று இருந்தும் அவர்களை ரெக்ரூட்மெண்ட் செய்வதும் இல்லை; அரசாங்கத்தின் ஆணை இப்படி இருக்கிறதே என்று கேட்டால், வேகன்சி இல்லை என்று சொல்கிறார்கள். எனவே, இதுபோன்ற நிலைமைகள் வராதபடி, புதிதாக அமைக்கின்ற இன்ஸ்ட்டிடியூஷன்களில் 18 பர்செண்ட் என்பதைக் கட்டாயமாக அமல் நடத்த வேண்டுமென்று தாக்கீது கொடுக்கப்பட்டிருக்கிறதா? அல்லது இனிமேலாவது கொடுப்பதற்கு முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ அரங்கநாயகம். மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அரசைப் பொறுத்தவரையில் எல்லா நிறுவனங்களுக்கும் அந்த உத்தரவு தரப்பட்டிருக்கிறது.

+ 2 வகுப்பில் கல்வி பயிலும் மாணவர்கள்.

62 (*வினா எண். 16812)—திரு. சு. முத்துக்கிருஷ்ணன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) +2 கல்வி முறையில் விருப்பப் பாடங்களை மாணவர்கள் படிக்கும்போது பட்டப்படிப்பில் உரிய இடம் கிடைக்காமல் மாணவர்கள் அவதிப்படுவது அரசுக்குத் தெரியுமா?